DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 4/2024 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஹரிபாஸ்கர் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ.பாண்டியராஜ் |
| Village | : | ஆர்.எஸ்.மங்கலம் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1, A2, A4 are present. A3 absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 21.03.2024

---

**முதல் விசாரணை**

1. நான் ஆர்.எஸ்.மங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் காரைக்குடியில் உள்ள கோவிலூர் பாலிடெக்னிக் கல்லூரியில் Diplomo in

Mechanical Engineering படித்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும்.

2. போன 2023ம் ஆண்டு மார்ச் மாதத்தில் எனது நண்பன் அஜித் என்பவருக்கு பிறந்தநாள் வந்ததால் அவரை வாழ்த்தி நான் எனது வாட்ஸ் அப்பில் ஸ்டேடஸ் வைத்திருந்தேன். ஆஜர் எதிரிகளுக்கு எனது நண்பர் அஜித்தை பிடிக்காது அதனால் எதிரி பரமேஸ்வரன் எனக்கு போன் செய்து அவனுக்காக நீ எப்படி ஸ்டேடஸ் வைப்ப என்று சொல்லி அவன் யாதவன் அவன் பிறந்த நாளுக்கு எதுக்காக ஸ்டேடஸ் வைக்கிறாய் தேவிடியா பையா என்று கெட்ட வார்த்தையால் என்னை அசிங்கமாக பேசினார்.

3. நான் அந்த ஸ்டேடசை எடுக்கவில்லை அதனால் 20.03.2023ம் தேதி இரவு 08.00 மணிக்கு மேல் எதிரிகள் நான்கு பேரும் என் வீட்டுக்கு வந்து என்னை அடித்தார்கள். அதில் இரண்டு பேர் கையில் கட்டை வைத்திருந்தார்கள் எனது தலையில் அடிக்க வந்தததை எனது கையால் தடுத்ததில் எனது கையில் மட்டும் ஊமைக்காயம் ஏற்பட்டது.

4. எனக்கு பெற்றோர் கிடையாது நான் எனது பாட்டியுடன் தான் வசித்து வருகிறேன். என் வீட்டிற்குள் வரும்போது என் பாட்டி தான் கதவை திறந்தார் அவரை கீழே தள்ளிவிட்டு தான் என்னை அடிக்க வந்தார்கள்.

5. பின்னர் பக்கத்தில் இருக்கும் எனது மாமாவும் ஊர்க்காரர்களும் சண்டையை விலக்கிவிட்டார்கள். பின்னர் என்னையும் எனது பாட்டியையும் உறவினர்கள் திருவாடானை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். ஒரு நாள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று மறுநாள் 21.03.2023ம் தேதி இரவு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன்.

6. என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார்மனு நான் கொடுத்தது தான் **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.</u>**